//தேர்வுகள்// //அவசரம்// //தனிகவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3865 /ஆ4/2023 நாள்: 08.02.2024

| | | |
|---|---|---|
| பொருள் | : | தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –2023–2024–ம் கல்வியாண்டு மார்ச் –2024 மேல்நிலை பொதுத்தேர்வுகள் –விடைத்தாள் திருத்தும் பணி – – விருப்பமுள்ள விடைத்தாள் திருத்தும் மையம் தேர்வு செய்து அனுப்புதல் –தொடர்பாக |
| பார்வை | : | அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர்(மேல்நிலை) சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 017181/H2/2023 நாள் 07.02.2024 |

===============

வேலூர் மாவட்டம்,அரசு /நகரவை /ஆதிதிராவிடர்நல /அரசு நிதியுதவிப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கவனத்திற்கு

நடைபெறவிருக்கும் 2023–2024 ஆம் கல்வியாண்டு மார்ச்– 2024 மேல்நிலை பொதுத்தேர்வுகள் விடைத்தாள் திருத்தும் பணிக்கு வேலூர் மாவட்டத்தில் கீழ்கண்ட பள்ளிகள் விடைத்தாள் திருத்தும் மையங்களாக செயல்பட பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இணைஇயக்குநர் (மேல்நிலை) அவர்களின் செயல்முறைகளின் படி ஆணையிடப்பட்டுள்ளது.

1. (மைய எண் : 69) சிருஷ்டி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பிரம்மபுரம்,வேலூர்.
2. (மைய எண் :70) அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி நடுப்பேட்டை,குடியாத்தம்,வேலூர்.

மேலும் விடைத்தாள் திருத்தும் பணிக்கு முதுகலை ஆசிரியர்கள் விரும்பும் விடைத்தாள் திருத்தும் மையத்திற்கு இணைப்பில் காணும் Google sheet–ல் பதிவுகள் மேற்கொண்டு ஆசிரியர்களிடமிருந்து கையொப்பம் பெற்ற ஒரு பிரதி மற்றும் வருகை பதிவேடு நகல் தொகுத்து தனிநபர் மூலம் 11.02.2024 அன்று மாலை 4.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் நேரில் சமர்பிக்க பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

**குறிப்பு : மேற்காணும் தகவல் அரசுதேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்ப வேண்டி உள்ளதால் தலைமையாசிரியர்கள் தனிகவனம் செலுத்தி எவ்வித காலதாமதமின்றி உடன் சமர்பிக்க மீள அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

// ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்

பெறுநர்:

அரசு /நகரவை /ஆதிதிராவிடர்நல /அரசு நிதியுதவிப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல் :

வேலூர் மாவட்ட கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் )தொடர்நடவடிக்கையின் பொருட்டு